2022 ஏப்ரல் 21]

போடுவாரேயானால், அவருக்கு ஒட்டுமொத்தமாகத் தயாரித்து வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அவரவர் தேவைக்கேற்ப தினம் தினம் என்ன தேவையோ அதற்கேற்றாற்போல அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

உள் விளையாட்டு அரங்கம்

***17870—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, ஏரல், ஸ்ரீவைகுண்டம் மற்றும் சாத்தான்குளம் ஆகிய வட்டங்களில் உள் விளையாட்டு அரங்கங்கள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி, ஸ்ரீவைகுண்டம், ஏரல், சாத்தான்குளம் வட்டங்களில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் தொகுதி கிராமப்புறங்கள் நிறைந்த தொகுதியாகும். அங்குள்ள இளைஞர்கள் ராணுவத்திலும், காவல் துறையிலும் அதிகம் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இளைஞர்கள் என்றால், இப்போது இருக்கின்ற நிலையைப் பார்த்தோம் என்றால், ஒரு காலத்தில் வெளியில் சென்று விளையாடாதே என்று பெற்றோர்கள் கூறிய நிலை போக, இன்று ** இது அவர்களுடைய நேரத்தை வீணடிப்பதால், பெற்றோர்கள் வெளியில் சென்று தங்கள் குழந்தைகள் விளையாடாதா என்று ஏங்கிக்கொண்டிருக்கிற ஒரு நிலை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு விளையாட்டரங்கம் போன்ற கட்டமைப்புகள் அதிகம் அவசியமாகத் தேவைப்படுகின்றன. ஸ்ரீவைகுண்டத்தில் அனைத்து வசதிகள்கொண்ட ஒரு sports complex மற்றும் சாத்தான்குளத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி இருக்கிறது, அதில் ஓர் உள் விளையாட்டரங்கம் தேவைப்படுகிறது. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கூறிய ** என்ற வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு விளையாட்டு வசதிகளுடன்கூடிய தூத்துக்குடி மாவட்ட விளையாட்டரங்கத்தை அந்த மாவட்டத்தில் இருக்கின்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பயன்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரை, கோவில்பட்டி Hockey வீரர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. இந்திய அணிக்கே Hockey வீரர்களைத் தரக்கூடிய பகுதி, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி. அங்கு ஒரு Synthetic hockey மைதானம் அமைக்கப்பட்டு, அதுவும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 21]

பயன்பாட்டில் உள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் விளையாட்டு மைதானம் கேட்டிருக்கிறார்கள். துறையினுடைய அதிகாரிகள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் உதவியோடு, ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி, ஸ்ரீமூலக்கரை ஊராட்சியில், அரசுக்குச் சொந்தமான 18 ஏக்கர் இடத்தை கண்டறிந்துள்ளார்கள். அந்த இடமானது தூத்துக்குடி விமான நிலையத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் மிக அருகில் உள்ளது. அந்த விளையாட்டு மைதானத்தை ஒரு முன்மாதிரி மைதானமாக உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற 'சட்டமன்றத் தொகுதியில் ஒரு Mini Indoor Stadium' *என்கின்ற திட்டத்தில், நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு. அதுவும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–05

அதேபோல், ஸ்ரீவைகுண்டம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2,000–க்கும் மேற்பட்ட மாணவிகள் பயின்று வருகின்றார்கள். அவர்கள் உள் விளையாட்டரங்கம் கேட்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]